# A LETTER, ADDRESSED TO THE MEMBERS OF HINDOO TRACT SOCIETY

MADRAS,

By a Member.

சென்னை

இந்து டிராக்டு சொஸைட்டியின்

மெம்பர்களுக்கு

அச்சங்கத்தின் ஓர் மெம்பர்

எழுதிக்கொண்ட

நிருபம்

19—5—1888.

ப்ரம்மவித்தியா பிரேஸ் சிதம்பரம்

உ

ஸ்ரீ

“ [illegible]

[illegible] ”

இந்துண்டீா

மண்டலத்தின்

பிரதானநகரமாகிய சென்

னையிற்பிறந்து வளர்ந்தோங்கி, ஆரியமதத்தைத்

ஆதரித்து, அநாரிய மதங்களை நிராகரிக்கும்

பெரும் புகழ்பெற்றதும் [[illegible]

[illegible]] என்று வடமொழியில் வழங்கத்த

க்கதும், தற்காலராஜாங்கபாஷையால

[Hindu Tract Society] இந்து டிராக்டு ஸொ

ஸைட்டி எனப்பெயரியதுமான செ

ன்னை ஆரியஜன மகாசங்கத்து

மூன், ஷை சங்கத்தார் நடத்திவ

ரும் புண்ணியசமயபரிபால

ன மகாதருமத்தின் பய

னை எங்கும்பரப்பவி

ரும்பி அச்சங்கத்தின் போதாவின் பேரில்

முன்வந்த அனேக அவயவிகளுள் (Members)

ஒருவரும், தென்னாட்டில்சிறப்புற்றோங்கிய

மன்னார்குடியில்
விளங்கும் ஸ்ரீமத் மகா
மகோபாத்தியாய ஸ்ரீ
இராஜு சாஸ்திரிகள்
அவர்களது சிடர்
களிலொருவ
நமான
சிதம்பரம் ப்ரம்மவித்தியா
பத்திராதிபர் மிகவும்வ
ணக்கத்துடன்
எழுதிக்கொண்ட
நிருபம்

ஐயா,— நமது சபையிற் சேர்ந்த சமயாபிமானிகளே !! எனது சிறியவிண்ணப்பத்திற்குச் சிறிது செவிகொடுக்கத் தமது பேலாணகணத்தை எதிர்பார்க்கிறேன்.

உலகெலாங் கடந்து உண்மைப்பொருளாய் உயர்ந்தோர் உள்ளத்தின்கண் எழுந்தருளி, ஏனையப் பொருள்களை மறைத்து, வாசனைகளைத் தொலைத்துத் தன்மயமாக்கிப் பெருங்கருணை கடலில் தமது தொண்டர்களை மூழ்கச்செய்ய வல்லமைதற்டகள், உலகின்கணுள்ள உயிர்களின அநாதிபசம்பந்தப் பிராயுக்த அநாதிகர்ம பரம்பரைகளுக்கேற்பச் சதுர்முகமூர்த்தியைப் படைத்து, திருமாலைப் போகங்களையளித்துப் பரிபாலிக்கும் தன்மையைத்திட்டித்து, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனங்களைச் செய்து, சர்வைசுவரியங்களையும் ஞானவைராக்கிய பக்திகளையும் தமதுதொண்டர்களுக்கீந்தும், ஸ்ரீ ருத்ரமூர்த்தியைப் படைத்து அழிக்கும்வழியமைத்து, உலகங்களில் உயிர

ழிந்தும், மூர்த்தித்திரியங்களுக்கு அதீதமாய் சகளமென்றும், சகளநிஷ்களமென்றும், நிஷ்களசகளமென்றும், நி[ஷ்க]ளமென்றும், அதீதமாயும், அவஸ்தைகளைக் கடந்து, உலகத்தி[லு]ள்ள அநேகமதத்தர்களால் இப்பிரபஞ்சவிகற்ப அதிட்டானமென்றும், இப்பிரபஞ்ச அந்தரியாமியென்றும், இப்பிரபஞ்சத்தை நிஷ்டாதாவென்றும், பற்பலவழி[க]ளில் எடுத்துக் காட்டப்பட்டதுமாய பரம்பொருளே தம்[து] திருவருட் பெருக்கத்தால் மாயாசபளஸகுணவடிவமாய் [ஸ]தாசிவஸ்வரூபமாய் நின்று வேதமுதலிய பலசாஸ்திரங்களையும் ஞான நூல்களையும் வெளியிட்டு, அநாதிமலபத்தரான [ஜீ]வர்கள் அஞ்ஞான இருளைப்போக்கி அத்துவைதானந்தத்தை [அநு]பவிக்கும் பொருட்டுத் திருவுளம்பற்றினதாய் ஸ்ரீ மாபாரதத்தின் சாந்திபருவத்தில் ஆரியமதபரமாசாரியருமான ஸ்ரீவேதவியாஸமுனிவர் திருவாய் மலர்ந்தருளினர். அவ்விதப்பரம்பொருளின் ஒலிவடிவமெனச் சொல்லத்தக்க ஆரியமத மூலதனமான வேதங்கள், சாஸ்திரங்கள் இவைகள் காலஞ்செல்ல ஏதேனுங்குறைவையடைந்தால் "யதாயதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்" எவ்வக்காலங்களில் தர்மலோபமும் அதர்மவிருத்தியும் தோன்றுமோ அவ்வக்காலங்களில் யானவதரிப்பேனென்று ஸ்ரீகண்ணபிரான் பகவத்கீதா திவ்வியசாஸ்திரத்தில் திருவாய் மலர்ந்தருளிய பிரகாரமும், கூர்மபுராணத்தில் "ஒவ்வொரு கல்பங்களிலும் வேதாசாரியராக ஸ்ரீ நாராயணனும் ஞானாசாரியராக ஸ்ரீருத்திரமூர்த்தியும் அவதரிப்பார்கள்,, என்று சொல்லிய பிரகாரமும், அநேககற்பங்களில் அரிஹராம்சங்கள் பொருந்தியவதரித்த மார்க்கண்டேயர், பிருகு, வாமதேவர் முதலிய மகரிஷிகள் முற்கற்பங்களில் நமது வேதசாஸ்திரங்களைக்காத்தவர்; நிகழும் சுவேதவராக கற்பத்தில் அவ்வதிகாரத்தைக் கைக்கொண்ட, ஸ்ரீமத் பாராசரமுனிவரருமைப் புதல்வராகிய வாதராயணமுனிவர் வெளியிட்ட திவ்வியசித்தா[ந்த]

தாந்த சூத்திரங்களை அநுசரித்தும், இக்கர்ப்பத்தின் ஞானாசாரியர்களான ஜகத்குரு விருதுபூண்ட ஸ்ரீமத் பகவத்பாத சங்கராசாரிய சுவாமிகளவர்கள் முதலாயினோர் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீமத் பிரமசூத்திர பாஷ்யாதிகளை மதித்தும், பின்னர் அவ் வாரியமதத்திற்கு நேர்ந்த சிலகுறைகளை நீக்கி அக்காலத்தில் தோன்றிய ஆபாசமதங்களை அழித்து நமக்கு நன்மைபுரிந்த ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதரவர்களின் திருமரபிலவதரித்தும் அவர்கள் மறுவுருவென ஐபமுறைத்தக்க[illegible]ல்விடசாஸ்திர பாண்டித்தியம்பொருந்திய மேற்கண்டமகா[ம]ஹோபாத்தியாய சுவாமிகளவர்களிடம், சுமார் 12-வருடகால[ம்] வித்தியாப்பியாசஞ்செய்துவந்தயான் தற்காலம் உலகத்திற் [தோ]ன்றியிருக்கும், ஆஸ்திகமதத்தினாதாரவுகளையும், மற்றமதங்களின் பெருக்கத்தையுங்கண்டு அதைத்தடுக்க எமது ஆசாரியரிடம் ஆஞ்ஞைபெற்று இக்காரியம் அநேக பண்டிதர்கள், பிரபுக்கள் முதலியவர்கள் சகாயத்தால் நடந்தேறவேண்டியதாதலால், ஆங்காங்கு வசிக்கும் வித்துவத்பிரபுக்களினபிப்பிராயங்களை அறியக்கருதி 1879 ம்வருடமாகிய பிரமாதிவருடத்தின், துலாமாதத்தில் யான் ஆங்காங்குநம் மதத்தின் பெருமைகளை உபந்நியசித்தலே தற்காலத்திற்குசிதமெனக்கொண்டு வெளிவந்தேன். அக்காலத்தில் திருப்பனந்தாள் காசிமடத்தில் பட்டம்பெற்றிருந்த ம-ா-ா-ஸ்ரீ இராமலிங்கத்தம்பிரானவர்கள் பேருதவியால் சோளதேசத்தைநோக்கிச்சென்று கோயமுத்தூர், பாலக்காடு, கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, வடகரை குத்திப்புர முதலானவிடங்களில் சுமார் ஆறுமாதகாலம்வரையில் சஞ்சரித்துப் பலவிடங்களில் ஆரியதிராவிடபாஷைகளால் எமது தாற்பரியத்தை வெளியிட்டு விக்கிரம வருடம் கார்த்திகைமாதம் இச்சென்னைவந்து சேர்ந்தேன். அப்பொழுது அங்குள்ள காசிமடத்தின் ஏஜண்டு ம-ா-ா-ஸ்ரீ சபாபதி ஐயரவர்களால் கூட்டப்பட்ட சிலசங்கங்களில் பிரசங்கங்கள் செய்தேன். அக்காலத்தில் "சென்னையிலுள்ள காமாசாஸ்[திரி] யியபல வித்துவான்களும் வந்திருந்தார்கள். பிர

அவசரகாரியத்தி நிமித்தம் கும்பகோணம் வந்து அவ்விட
ங்களிலிருந்த பாலசம்ஸ்கிருத சபைமுதலிய சிலசபைகளில் சி
றசில உபந்நியாசங்களைச்செய்து, இரண்டுசபைகளையுங்கூட்டி
வைத்து சிலகாலம் அங்கிருந்து விஷு-வருடக்கடைசியில் சென்
னையையடைந்து அநேகர்களின் வேண்டுகோளின்படி வாரந்தோ
றும் ஒவ்வொரு விஷயங்களைப்பற்றிப் பிரசங்கஞ்செய்வதாக ஒ
ப்புக்கொண்டு நடத்திவந்து; நம்மவர்களுக்கு வடமொழிப்பயி
ற்சி அவசியமென அபிப்பிராயங்கொண்ட சிலருடைய வேண்
டுகோளை அநுசரித்து சித்திரபானு வருடத்தில் சென்னையில்
'ஹிந்து சம்ஸ்கிருதகாலேஜ்'' என ஓர் பாடசாலையை ஏற்படுத்த
வுத்தேசித்து, எனது சகோதரன் பட்ட ஸ்ரீ நாராயணசாஸ்
திரி என்பவரையும் வரவழைத்துச்சேர்த்துக்கொண்டு சிலகால
ம்பாடசாலையை நடாத்தி, அப்பாடசாலைக்கு வேண்டியபடி ஏற்
பாடுகள்செய்துவர, அக்காலத்தில் அதேபாடசாலையில் பதவா
ரந்தோறும் பிரசங்கங்களை நாங்களிருவரும் நடாத்திவந்தோம்.
அதுவிஷயங்களைப்பற்றி பீப்பிள்ஸ்பிரண்டு பத்திரிகை; சுதேசாபி
மானி, ஆந்திரபாஷா சஞ்சீவினி முதலியபத்திரிகைகளில்விவரமா
ய் அநேகர் தெரிவித்திருப்பார்கள். அப்பாடசாலையைப்பற்றி அக்காலத்
தில் ஸ்மால்காஸ்கோர்ட்டு ஜட்ஜ் திவான்பகதூர் பர்கி ஸ்ரீநிவா
சராவ், ம-ா-ா-ஸ்ரீ எ-சுப்பராயப்பாவர்கள் M. A. முதலிய
அநேகர்கள் சிலாகித்திருக்கிறார்கள். தண்டலம் சுப்பிரமணிய
சாஸ்திரிகள், ஏ- இராமலிங்கப்பிள்ளை பிட்டி முனிசாமிசெட்
டியார், பார்த்தசாரதிசெட்டியார் முதலிய அநேகப்பிரபுக்களபி
மானத்தாலும் அப்பாடசாலை நடந்தேறிவந்தது. அப்பாட
சாலையை ஒருசமயம் எனது சகோதரரிடம் ஒப்புவித்து யான் பெ
ங்களூர், மைசூர், ஸ்ரீரங்கப்பட்டணம், ஹாஸனம், சிருங்கேரிமு
தலியவிடங்களிற்சென்று அப்பாடசாலைக்காக சில ஏற்பாடு
செய்துவந்தேன். அக்காலம் மைசூர் மகாராஜா அவர்கள் சமஸ்
கிருதகாலேஜில் ஓர்பெரியபிரசங்கஞ்செய்ய அதைக்கண்டு அர

ஒவ்வொரு கிரந்தியாகவும் கடந்திவர யோர்ப்பார்த்துச் செய்து என்னை மிகவாய்க் கொண்டாடுகிருர்கள். பிறகு சிருங்கேரிசமஸ்தானம் ஜகத்குருஆசாரியஸ்வாமிகளவர்கள் எனக்கோர் ஸ்ரீமுகமளித்து திருவனந்தபுரம் சமஸ்தானம் மகாராஜா அவர்களைப்பார்க்கும்படியாருட்டனுப்பினுர்கள். அவ்விடமிருந்து திரும்பி சென்னையில்வந்தபிறகு செந்தமிழ்க்கலைப் பாடசாலை நடந்தது. சுபானுஸம்வத்ஸரம் அந்த பாடசாலையானது, படிக்கும் பிள்ளைகளில்லாமையால் நிறுத்திவிடப்பட்டது. பிறகு தாருண வருடத்தில் எமது ஆசாரியரவர்களுக்கு சரீரத்திலுண்டான ஒர் அசௌக்கியத்தினிமித்தம் அவர்களை நோக்கிச்சென்றபொழுது, அவர்களது ஸ்ரீமத் அப்பய்யதீக்ஷிதர் கிரந்தங்களை வெளியிடச் செய்யவேண்டுமென்று அளித்த ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு கும்பகோணம்வந்து, ம-ா-ா-ஸ்ரீ சாதுசேஷய்யரவர்கள், கே-சுந்தரராமய்யரவர்கள் முதலிய கனவான்களுடன் கலந்தாலோசித்து, அப்புத்தகங்களை வெளியிடக்கருதி, திரவியசகாயங்களைச் சம்பாதிக்கத் திருநெல்வேலிஜில்லாவை நோக்கிச்சென்றேன். அப்பொழுது எனது சகோதரரும் உடன்வந்தார்.

திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகப் பண்டாரசந்நிதிகளவர்கள் அச்ஜில்லாவில அனேக ஜமீன்களுக்கு அநுப்பிய ஸ்ரீமுகவஸ்திரத்தாலும், திருநெல்வேலி டிஸ்டிரிக்கோர்ட் ப்ளீடரும் பரோபகாரசிந்தையும் பரமதேசாபிமானியுமான எ. கிருஷ்ணசாமிஅய்யரென்கிற கனவானுடைய உதவியினுலும், திருநெல்வேலி தாம்பிரசமுத்திரம், கள்ளிடைக்குறிச்சி, ஊற்றுமலை, ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகிரி முதலிய இடங்களுக்குச்சென்று சகோதரர்களிருவரும் ஆரிய திராவிடபாஷைகளால் பல உபந்நியாசங்களைச் செய்து, அத்தேசத்தைவிட்டகன்று குடந்தைமாநகரில் அத்துவைதசித்தாந்தத்தைப் பற்றிஒர் உபந்நியாசத்தைச் செய்து முடித்து, மீண்டும் இச்சென்னை வந்து சிலகாலம் வசித்து [illegible] பேட்டை, சிந்தாதிரிப் பேட்டை, [illegible] உபந்நியாசங்களைச் செய்து பிறகு சிதம்பர

115991

ரவ்வந்து, அந்நகரில் "ப்ரம்மவித்தியா" என்னும் ஓர் யந்திரசாலையை பார்த்திபவருடத்தினிறுதியில் ஸ்தாபித்து, அதில் ஸ்ரீமத்அப்பயதீக்ஷிதர் கிரந்தங்களை வெளியிடத்தொடங்கினேன். பிறகு, நாஸ்திகர், கிறிஸ்தவர்முதலிய அன்யமதஸ்தர்களால் நம்மவர்களுக்குண்டாகும் மனக்கலக்கத்தை விலக்கக்கருதி ஆரியத்திராவிடபாஷைகளில் ப்ரம்மவித்யா என்னு மகுடத்தின்கீழ் ஓர் மாதாந்திரப்பத்திரிகையை பிரசுரம்பண்ணத்தொடங்கினேன். அப்பத்திரிகை துவக்கி மூன்றாவதுமாதம் யான் கோயம்புத்தூருக்கு யாத்திரைசெய்யுங்கால், இந்துமதத்தைப்பற்றிப் பிரசங்கம்செய்ய, அங்குசில கிறிஸ்தவர்கள் சிற்சில துண்டுபத்திரிகைகளை என்னிடம் கொடுத்தார்கள். அதைப்பார்த்தவுடனே என் மனதில் இந்துமதத்தைச் சேர்ந்த சில துண்டுபத்திரிகைகளை வெளியிட ஓர்சங்கம் நியமிக்கவேண்டுமென்று ஓர்சங்கற்பமுதித்தது. உடனே கோயமுத்தூரினருகாமையிலுள்ள பேரூரென்னும் கிராமத்தில் வசிக்கும் ப்ரம்மஸ்ரீ மதிகண்டனசாஸ்திரியாரென்னும் வேங்கிடகிரிசாஸ்திரியாரிடம் யான்கலந்தாலோசித்து சிதம்பரம் வந்துசேர்ந்து அவர்களுக்குக்குறிப்பிட்டசமயத்தில் தந்தியுமனுப்பினேன். அச்சமயம் அவர்கள்வர நேரவில்லை. மறுபடி யான் ஒருயாத்திரைசெய்யக்கருதி, திருச்சி, ஈரோடு, சேலம், திருப்பத்தூர்முதலிய விடங்களில் பலபிரசங்கங்கள் செய்துகொண்டு சென்னையில்வந்து நமதுசங்கத்தின் தற்காலகாரியதரிசியாயிருக்கும்ம-ா-ா-ஸ்ரீ பெரியசாமிஅய்யர் மானேஜிங்கமிட்டிமெம்பரும், மதராஸ்ரிப்பன் ப்ரெஸ்ப்ரொப்ரைட்டருமான ம-ா-ா-ஸ்ரீ சை-இரத்தினசெட்டியாரவர்கள் இவ்விருவரையுங்கண்டு இத்துண்டுபத்திரிகை வெளியிடஓர் சபை நியமிக்கவேண்டுமென் றாலோசித் ததற்கவர்கள் மற்ற கனவான்களுடனே சேர்ந்தாலோசிக்க வேண்டுமென்று விடையளித்தார்கள். நான்உடனே சென்னைவிட்டு சிதம்பரம் வந்துசேர்ந்து, அங்கிருக்கையிலுடனே சென்னை... சபை தோன்றியதாக நமது செட்டியாரவர்கள் க1...

வேதெரிந்துகொண்டு மிகவாநந்தமடைந்தேன். உடனே ஒருமா தத்திற்கெல்லாம் அச்சபையார்களிடமிருந்து கிடைத்த சிலது ண்டு பத்திரிகைகளைக் கைக்கொண்டு, திருச்சி, மதுரை, திருநெல்வேலிஜில்லாக்களுக்குச் சென்று அங்கு பரப்பிவந்தேன். இதுவிஷயத்தில் யான் சிலகனவான்களுடைய பேருதவியால் மாத்திரம் முடிக்க உத்தேசித்த இவ்வேலை இவ்விதம் சென்னையில் தக்க கனவான்களால் ஆதரிக்கப்பட்டு வெளிவந்ததைப்பற்றி பேரானந்தமடைந்து, இதில் யானும் ஓர்மெம்பராகவிருந்து செய்யவேண்டிய கருமங்களைச்செய்யலாமென்றெண்ணி அகமகிழ்ந்து அச்சங்கத்திற்கு அப்ளிகேஷன்செய்து ஓரங்கமாயினேன். பிறகு இச்சங்கத்திற்கு கிளைகளை ஸ்தாபிக்கவேண்டி திருச்சினாப்பள்ளி, திருவானைக்காவல், திருவிடமருதூர், திருநெல்வேலி, வீரராகவபுரம், தச்சநெல்லூர், ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், கடயம், தென்காசி, தூத்துக்குடி. ஸ்ரீவில்லிபுத்தூர் இவ்விடங்களில் பலவித உபந்நியாசங்களைச்செய்து கிளைச்சபைகளையு மேற்படுத்தினேன். மீண்டும், பலவிடங்களில் பலவேலைகளைச்செய்ய என்னாலியன்றமட்டில் உழைப்பதிற்குறைவில்லை. சுமார் 10- வருடகாலமாய் இவ்விதவேலைகளில் முயன்று தமிழ்நாடு முழுவதும் திரிந்தும், மலையாளநாட்டில்சஞ்சரித்தும், வடநாடுகளில் கடப்பை, தார்வாடா முதலியவிடங்களில் சென்றும், அநேகப்பெருங்கூட்டங்களில் ஆரியத்திராவிட ஆந்திர ஆங்கிலேய [illegible] கர்நாடாதிபாஷைகளில் பயிற்சியடைந்த அநேகமகா வித்துவான்களுடன் பழகியும். அவர்கள் முன்னிலையில் எனது சிற்றறிவிற்கெட்டியமட்டில் உபந்நியாசங்களைப்புரிந்தும், அவ்வித்துவான்கள் "இதுநல்லகாரியம் விடாது முயலவேண்டுமென்று சொல்ல" அவர்கள் வாக்கை யுபதேசமாகக்கொண்டு இதுவரையில் செய்துவந்த வேலைகளில்; அநேக ஆங்கிலேயபாஷையைக் கற்றவித்துவான்கள் நமது ஆரியமத வுண்மைகளைத் தெரிந்துகொள்ள கங்கணம்பூண்டார்கள் [illegible] பண்டிதர்கள் மதபோதகத் தொழிலைக் கைக்கொ

(6)

ண்டு முன்வந்தார்கள். அநேகர் மதவிசுவாச மடைந்தார்கள். அநேக மதாபிமானசபைகள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டன. அநேகர்தாம் விட்டிருந்த சிலவைதிகாசாரங்களைக்கொண்டனர். இதற்குதாரணங்களையும் ஆங்காங்கு செய்த உபந்நியாசங்களையும் இங்கெழுதினால் பெருகும். அநேகமாய் ஹிந்து முதலிய இங்கிலிஷ்பத்திரிகைகளில் தேசபாஷா பத்திரிகைகளிலும் பார்க்கலாம். இதை. வெளிநாடுகளிலிருக்குஞ் சிற்சில குறைவுகளையும் அவைகளை விலக்கவேண்டிய ஏற்பாடுகளையும் அதற்கு நமது சபையார் செய்யவேண்டியதாக எனக்குப்புலப்பட்ட சிலவிஷயங்களையும் பின்வருமாறு வெளியிடத் தொடங்குகின்றேன்:—

இப்பொழுது நமது தேசத்தில் சொற்பகாலமாய் பாதிரிமார் பெருங்கூட்டத்து ஓர்பக்கமொதுங்கிவருகின்றது. அவர்களுக்குமுன்போல காரியம் சாய்வதில்லை. அவர்கள் எங்கு பிரசங்கஞ்செய்யினும் நம்மவர்கள் ஆக்ஷேபஞ் செய்கிறார்கள். அவர்கள் ஆக்ஷேபத்திற்குச்சமாதானங் கூறச்சக்தியில்லை. என்றாலும் நம்மதப்பிரசங்கிகள் பலர் ஆங்காங்கு வெளிவருகிறார்கள். பிரசங்கங்கள் நடக்குமிடமட்டில் ஜனங்களுக்குண்டாகும் ஊக்கம் நீடித்திருப்பதில்லை. ஆகையால் நமது சபையார்களை நூதனமாய் ஏற்படுத்திக்கேட்டுக்கொள்ளும் ஏற்பாடுகள் இவை:—

1- வெளிகளில் இளைச்சபைகளை ஏற்படுத்தச்செல்லும்முன் அவசி, ஒவ்வொருசபைகளையும் நமதுசபைக்குக் கிளையாகச்சேர்த்து சந்தாத்தொகை வசூல்செய்து அவர்களுக்கனுமதிப்பத்திரங் கொடுத்து, அவர்களுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுக்கவும் நமதுசபையாரிடம் (Official order) மூலமாய் சர்வாதிகாரமும் பெற்றிருக்கவேண்டும். அங்ஙனமில்லாமையாற்றான் நானேற்படுத்திவந்த பலசபைகளில் சில சபைகள் இதுவரையில் ந... பையுடன் யாதொரு எழுத்துமூலமாய் சம்பந்தப்ப

2- வெளிநாடுகளுக்குச் செல்லும் பிரசங்கிகளுள் சிலரேனும் நமது ஆரியமதக் குலதனமான வேதசாஸ்திரங்களிற் பயிற்சியடைந்து ஒப்பிட்டுச் சாமர்த்தியம் பெற்றவராய், மற்றையமதங்களில் அளவிறந்த குற்றங்களைக் காட்டுவதுபோல் நம்மதத்தில் அவ்வித குணங்களைக் காட்டவலிமையுடையவராகவிருக்கவேண்டும். அங்ஙனமில்லாமல் புறமதக்குற்றங்களை மாத்திரம் கூறிவிடுவரேல், ஜனங்கள், இருவகையு மற்று மூன்றிலும் ஓர் மதத்திலு மபிமானமற்றுப்போகிறார்கள்.

3. உபந்நியாசிகள் பிறமதத்தை வீணிற்கடிசெய்யாமல் ஞாயக்குறைவுகளைமாத்திரம் நீட்டிக்காட்டவேண்டும்.

4. நமது ஆரியமதத்தின் சித்தாந்தப் படி ஜடஜீவ பரமசுதனங்களை சற்றேனு மறியாதவர்களாயுள்ளவர்கள் நமதுசபையைச்சேர்ந்த உபந்நியாசிகளாயிருத்தல் அனுசிதம்.

5- நமதுமதத்தைப்பற்றி உபந்நியசிப்பவர்கள், நம்மதாசாரங்களுக்கேற்ப தத்தம் மதங்களுக்குரிய அடையாளங்களைமாற்றி யொழித்து ஏனையமதஸ்தர்களைப்போல் உடைகள், குறிதரித்தல் கூடாது.

6 இனிவெளியில்சேரவேண்டிய சபைகளை நடத்தநமது சங்கத்தின் தக்க மெம்பர்களையே அனுப்பவேண்டும்

7- சென்ற ஜனவரிமாதத்தில் கூடிய பொதுசபையில் தீர்மானித்தபடி மடாதிபதிகளுக்கு வரையவேண்டியவிண்ணப்பம் கூடியசீக்கிரத்தில் வெளிவரவேண்டும்.

இவ்விஷயங்களைப்பற்றி நமது மானேஜிங்கமிட்டி மெம்பர்களும், மற்றவர்களும், நமதுமேன்மைதங்கிய அக்கிராசனாதிபதியவர்களும் குற்றமுள்ளவைகளை யகற்றி குணமுள்ளவைகளைக் கைகொண்டு உசிதமானபடி நடத்துவார்களென எதிர்பார்க்கிறோம்.

...மே நமதுசபையில் ஒவ்வொரு உபந்நியாசிகளும்

ஒவ்வொரு சௌரமெம்பர்களும் என்போலியரான ஏனைய மெம்பர்களும், தாம் தாம் செய்த வேலைகளைப்பற்றி வரையும் பத்திரிகைகள் எல்லோருமறியும்படி வெளியிடப்பட்டால், மற்றவர்களுக்குமது ஓர் உற்சாகத்தை உண்டாக்குமென்று எண்ணுகிறேன் அவ்வச்சமயங்களில் நடக்கும் விஷயங்களைப்பற்றி அவ்வப்பொழுது சபையாரிடம் தெரியப்படுத்திக்கொள்ளவும் விருப்பமுடையவனாயிருக்கிறேன். ஆரியமதம் ஓங்கவும், வேதசாஸ்திரங்கள் விளங்கவும், ஆரியமதாசாரங்கள் முன்வரவும், அநாரியமதம் ஒழியவும், கவலையில்லாமையான நமது காருண்ய சக்கிரவர்த்திவியாரவர்களது அரசாட்சி நீடூழிவாழவும், [illegible]ம் ஓங்கவும், முக்குணங் கைக்கொண்டு மும்மூர்த்திகளாயின்று முத்தொழில்களை நடாத்தும் முழுமுதற்கடவுள் அருள் புரிவாராக.

[illegible]

[illegible]

[illegible]

---

இங்ஙனம்

H- T- சங்கத்தின் ஓர் மெம்பர்

கு- ஸ்ரீநிவாசசாஸ்திரி.

சிதம்பரம்